## திருப்பரங்குன்றத்தை

# இன்னொரு அயோத்தியாக மாற்ற பா.ஜ.க. முயற்சி!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேட்டி!

புதுடெல்லி,டிச.7-

**திருப்பரங்குன்றத்தை இன்னொரு அயோத்தியாவாக மாற்றிவிட வேண்டும் என்று பா.ஜ.க.வும் அதன் கூட்டணியும் முயற்சி செய்கிறது என்றும்,**

**உயர்நீதிமன்ற தீர்ப்பு ஒரு தவறான முன்னுதாரணம், இதுபோன்ற தவறான தீர்ப்புக்குப் பிறகுதான் மணிப்பூரிலும் கலவரங்கள் வெடித்தன! என்றும்**

**திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி எம்.பி. அவர்கள் நேற்று முன்தினம் (05.12.2025) டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

**அவரது பேட்டி வருமாறு:**

திருப்பரங்குன்றத்தில் பல நூற்றாண்டுகளாக எந்தப் பிரச்சனையும் இல்லாமல் மக்கள் கோவிலுக்குச் சென்று வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் சிக்கந்தர் தர்காவிற்கும் சென்று வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் விதமாக மக்களிடையே மத குரோதத்தை உருவாக்கக்கூடிய விதமாக தேவையில்லாமல் சிலர் பிரச்சினைகளை உருவாக்குகின்றனர்.

மக்களுக்குச் செய்ய வேண்டிய அத்தனை கடமைகளையும் தமிழ்நாடு அரசு சரியாக செய்து கொண்டிருக்கிறது. கார்த்திகைத் தீபம் தொடர்ந்து ஏற்றப்படுகிறது. கோவில் நிர்வாகமும் அறநிலையதுறையும் சேர்ந்து கார்த்திகைத் தீபத்தை மலைமீது இருக்கும் பிள்ளையார் கோவிலில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு முன் வழக்கமாக மலை அடிவாரத்தில் இருக்கும் கோவிலில் ஏற்றி கொண்டிருந்தார்கள். கோவில் மலைமீது கட்டப்பட்ட பிறகு அங்கு அந்த தீபம் ஏற்றப்படுகிறது.

### கல்லில் தீபம் ஏற்ற வேண்டும் என்பதா?

ஆனால் திடீரென்று எந்த மதத்திற்கும் சம்பந்தமே இல்லாத ஆங்கிலேயர் காலத்தில் வைக்கப்பட்ட நில அளவைக்கல் (சர்வே ஸ்டோன்) மீது தீபத்தை ஏற்ற வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைக்கப்படுகிறது.

இந்து மதத்திற்கு எதிராக இந்து மக்களின் மனநிலையை புண்படுத்தும் வகையில் கோவிலுக்குச் சம்பந்தமே இல்லாத ஒரு கல்லில் தீபம் ஏற்ற வேண்டும் என்று பிரச்சனைகளை உருவாக்குகின்றனர்.

ஏற்கனவே இந்த விசயத்தில் நீதிமன்றம் தலையிட்டு தீர்ப்பு வழங்கிவிட்டது. இப்பொழுது நீதியரசர் சுவாமிநாதன் அவர்கள் தேவையில்லாமல் தலையிட்டு அரசை மீறி ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறார்.

தமிழ்நாடு காவல் துறையைத் தாண்டி, மத்திய காவல்படையைத் தீபம் ஏற்றுவோருக்குத் துணையாக அனுப்பிவைக்கிறார். இதை பயன்படுத்திக்கொண்டு பா.ஜ.க. மத கலவரத்தை உருவாக்க நினைத்தது. பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள் இதை இன்னொரு அயோத்தியாவாக மாற்றி விட வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருப்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. அவர்களே இதை ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் பதிவு செய்கிறார்கள்

நாடாளுமன்றத்தில் இந்த பிரச்சனையை எழுப்பிய பொழுது, அமைச்சர் கிரண் ரிஜிஜு மூத்த உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்களைப் பார்த்து, நீங்கள் பேசுவது உங்களுக்கும் நல்லதல்ல உங்கள் கட்சிக்கும் நல்லதல்ல என்று மிரட்டக்கூடிய வகையில் எச்சரிக்கை விடுக்கிறார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

நேரமில்லா நேரம் என்பது உறுப்பினர்களின் நேரம். அவர்கள் தங்களது பிரச்சனைகளை முன் வைக்கக் கூடிய நேரம். ஆனால் அந்த நேரத்தை பயன்படுத்திக் கொண்டு அமைச்சர் எல்.முருகன் அவர்கள் தேவையில்லாமல் மிக நீண்டதொரு உரையை ஆற்ற அனுமதிக்கப்பட்டார். அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவரும் பல பொய் பிரச்சாரங்களை முன்வைத்தார்.



தமிழ்நாடு அரசின் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் காழ்ப்புணர்வை உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அவர் பேசினார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது, என்று தெரிவித்தார்.

**பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்தார்:**

தேர்தல் நடைபெறும் ஒவ்வொரு மாநிலத்திலும் இது போன்ற பிரச்சனைகளை கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டிலும் அப்படியொரு பிரச்னையைக் கொண்டுவந்து மதக்கலவரத்தை உண்டாக்குவதுதான் பா.ஜ.க.வின் அரசியல் வியூகம். பிரச்சனையை உருவாக்கி, அரசிற்கு கெட்ட பெயரை உருவாக்கி விட வேண்டும் என்பது தான் அவர்களது எண்ணம்.

அவர்கள் ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தமிழர்களாக தங்களை முதலில் உணர்ந்தவர்கள். யார் தங்களுக்காக பாடுபடுகிறார்கள், பெரும்பான்மை மக்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு யார் உழைக்கிறார்கள், யார் மக்களை பிளவுபடுத்தி அவர்களை ஆபத்தில் தள்ள நினைக்கிறார்கள் என்பதைத் தெளிவாக புரிந்து கொண்டவர்கள். இப்படியான பிரச்சனைகளை உருவாக்குவது எந்த காலத்திலும் பா.ஜ.க.வுக்குப் பயன்படாது.

நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்னையை எழுப்பியபோது, காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எங்களோடு நின்றார்கள்.

இந்தத் தீர்ப்பு ஒரு தவறான முன்னுதாரணம், இதுபோன்ற தவறான தீர்ப்புக்குப் பிறகுதான் மணிப்பூரிலும் கலவரங்கள் வெடித்தன.

தமிழ்நாடு அரசு பல கோவில்களில் குடமுழுக்கு நடத்துகிறது, விழாக்களை நடத்துகிறது. கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளையும் அறநிலையத்துறை செய்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு முன்பிருந்த ஆட்சியில் இல்லாத அளவுக்கு குடமுழுக்கு நிகழ்ச்சிகள் தற்போது நடக்கின்றன.

மக்களின் பக்தியை நிறுத்த வேண்டும், பக்தர்களுக்கு இடையூறுகளை உருவாக்க வேண்டும் என்று நினைக்க கூடியவர்கள் நாங்கள் இல்லை. பக்தர்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழலை உருவாக்கி அரசியல் குளிர்காய்வதற்காக பாஜகவினர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் அவர்களை அடையாளம் கண்டு கொண்டார்கள், அவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

### எல்.முருகன் பொய் குற்றச்சாட்டு?

அமைச்சர் எல்.முருகன் பேசும்போது இந்துக்களை திருப்பரங்குன்றத்துக்குள் அனுமதிக்கவில்லை என்ற ஒரு பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்தார். எந்த காலத்தில் இந்துக்கள் திருப்பரங்குன்றத்துக்கு போக முடியாத சூழ்நிலை இருந்தது? திருப்பரங்குன்றம் கோவிலுக்கு போகும் இந்துக்கள் தர்காவிற்கும் சென்று வழிபட்டு வரும் இணக்கமான சூழ்நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது. இன்று யாரும் போகமுடியாத சூழலை பாஜக தான் உருவாக்கியிருக்கிறது.

ஆகம விதிகள் என்று பேசக்கூடியவர்கள் அந்த ஆகம விதிகளை எல்லாம் குழிதோண்டி புதைக்க கூடிய வகையில் தீபத் திருநாள் முடிந்த அடுத்த நாள் தீபத்தை ஏற்றுவது என்பது ஆகம விதிகளின்மீது நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய இந்துக்களின் மனதை புண்படுத்தக்கூடியது.

யாருடைய மனதையும் புண்படுத்த கூடிய வகையில் தமிழ்நாடு அரசு நடந்து கொள்ளவில்லை. அப்படி எங்கள் மீது பழி சுமத்துபவர்கள்தான் உண்மையில் மக்களைப் புண்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டு மக்களை தன் அரசியலுக்காக ஒவ்வொரு நாளும் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அமைதியாக இருக்கிறது. மத பிரச்சனைகள் இல்லாத மாநிலமாக இருக்கிறது. பாஜக, ஆட்சி செய்யும் ஓர் இடத்திலாவது மத நல்லிணக்கமும் அமைதியும் இருக்கிறதா? யாரால் அங்கு மதப் பிரச்சனைகள் உருவாகிறது? அப்படிப்பட்ட பிரச்சனைகள் இல்லாத, மனிதர்கள் மனிதர்களாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை திமுக ஆட்சி உருவாக்கி தந்திருக்கிறது. அதைக் குலைக்கத்தான் பாஜக பாடுபட்டுக் கொண்டிருக்கிறது, என்று தெரிவித்தார்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

---

# ஒன்றிய அரசு நிதி பங்களிப்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது!

## மக்களவையில் ச.முரசொலி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச.7-

ஒன்றிய அரசு நிதி பங்களிப்பில் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது. ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது என தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் ச.முரசொலி குற்றம்சாட்டினார்.



ச.முரசொலி எம்.பி. கூறியதாவது:

மத்திய அரசு துறை திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசுக்கு 2024 25க்கு அளித்துள்ள தொகை ரூ.21 ஆயிரத்து 319 கோடி. உத்தரப்பிரதேசத்துக்கு அளித்துள்ள தொகை ரூ. 56 ஆயிரத்து 990 கோடி. இதே போல, மத்திய அரசின் நிதியுதவி திட்டங்களுக்காக தமிழ்நாட்டுக்கு 202425க்கு அளித்த தொகை ரூ.17 ஆயிரத்து 674 கோடி. உத்தரபிரதேசத்துக்கு அளித்த தொகை ரூ.45 ஆயிரத்து 506 கோடி. மத்திய பிரதேசத்துக்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 27 ஆயிரத்து 316 கோடி. பீகாருக்கு வழங்கப்பட்டுள்ள தொகை ரூ.27 ஆயிரத்து 123 கோடி. எனவே மற்ற வட மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாட்டுக்கு கிடைப்பது குறைவே. இதனால்மாநிலத்தின் வளர்ச்சியும், சமூக நலனும் பாதிக்கப்படுகிறது. இது குறித்து மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு மத்திய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி அளித்துள்ள பதில் மூலமே இதை அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

## தமிழ்நாட்டில் சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்த

# ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, டிச.7-

நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு தேசிய சுகாதார திட்டத்தின் கீழ் சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்த ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?



கடந்த 3 ஆண்டுகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், சுகாதார மையங்கள், மாவட்ட மருத்துவமனைகளில் சமூக சுகாதாரத்தை மேம்படுத்த ஒன்றிய அரசால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் நோயறிதல் மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகள் உள்ளிட்ட மருத்துவ வசதிகளை நிர்மாணிக்க,மற்றும் நவீனமயமாக்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை அங்கீகரித்துள்ளதா?

தருமபுரி மாவட்டத்தில் மருத்துவர்கள்,செவிலியர்கள்,துணை மருத்துவ பணியாளர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று தருமபுரி எம்.பி. ஆ.மணி சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ்விடம் கேள்வி எழுப்பி உள்ளார்.

---



சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 69வது நினைவு நாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகரச் செயலாளர்கள் நாட்டான். மாது, எம்.பி.கௌதம் மற்றும் ஏ.எஸ்.சண்முகம், என்.பி.பெரியண்ணன், டி.எல்.காவேரி, முல்லைவேந்தன், சுருளிராஜன், மே.அன்பழகன், ஜெகன், ராஜா, இளைஞர் அணி அசோக்குமார், ஐ.டி.விங் உதயசூரியன், திராவிடர் கழகம் ஊமை ஜெயராமன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடக்கநந்தல் க.பெ. நெடுமாறன்

### டிசம்பர் 7 (1994)



**சின்னசேலம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். தென்னாற்காடு மாவட்ட இலக்கிய அணிச் செயலாளராகவும் பொறுப்பேற்று செயல்பட்டவர்.**

**இந்தி எதிர்ப்பு, கறுப்புக்கொடி, கைலாசம் கமிசன் சட்ட எரிப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1946 மே 11, 12 தேதிகளில் மதுரையில் கறுப்புச் சட்டைப் படை முதலாவது மாகாண மாநாட்டில் தனது துணைவியாருடன் கலந்து கொண்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் “கொள்கை பிடிவாதக்காரர்” என்று புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---


## மதுக்கூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர்

# ஆர்.இளங்கோ தந்தை மறைவு!

## அமைச்சர்கள் முனைவர் கோவி.செழியன் - டி.ஆர்.பி.ராஜா - மாவட்டச் செயலாளர்கள் நேரில் அஞ்சலி!

தஞ்சை, டிச. 7 -

தஞ்சை தெற்கு மாவட்டம், மதுக்கூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சொக்கனாவூர் ஆர்.இளங்கோ தந்தை கழக மூத்த முன்னோடி ரெ.ராமு (வயது 90) வியாழக்கிழமை மாலை சொக்கனாவூர் புளியக்குடியில் உள்ள இல்லத்தில் வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோர்.



அன்னாரின் மறைவு செய்தி அறிந்த அமைச்சர்கள் முனைவர் கோவி. செழியன், டி.ஆர்.பி. ராஜா, மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன், பூண்டி கே.கலைவாணன், தி.பழநிவேல், முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழநி மாணிக்கம், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், ச.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் கா. அண்ணாதுரை, என். அசோக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏனாதி பாலு, எம்.இராமசந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, என்.வி. காமராஜ், என்.ஆர். இளங்கோவன், மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், பழஞ்சூர் செல்வம் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டுஅவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சித்தமல்லி ந.சோமசுந்தரம்

### டிசம்பர் 7 (2022)



**இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றி, கழகம் துவங்கியவுடன், அதில் தன்னை இணைத்துக் கொண்டு சித்தமல்லி கிளைக் கழக அமைப்பை முதன்முதலாக உருவாக்கி, அதன் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**கிளைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**1967, 1971 ஆகிய இரு முறை கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். பல்வேறு கூட்டுறவு சங்கம் மற்றும் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**